கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைகலாசார பீடம்

இறுதி வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2011/2012

**PSS** 4104 நிருவாகச்சட்டங்கள்

( **Administrative Law** )

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களையும் பகுதி II இல் இருந்து ஒரு வினாவிற்கும் எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

பகுதி I

1.

i. சட்டம் என்பதை எவ்வாறு விளங்கிக் கொள்ளலாம்? ( 03 புள்ளிகள் )

ii. சட்டத்தின் தோற்றுவாய்கள் (Source of Law) எவை? ( 03 புள்ளிகள் )

iii. வழக்காற்றைச் சட்டமாக ஏற்றுக்கொள்வதில் நீதிமன்றங்களால் மேற்கொள்ளப்படும் பரீட்சாத்தங்கள் எவை ? ( 03 புள்ளிகள் )

iv. இலங்கையின் சட்ட முறையில் இடங்கொண்டுள்ள சட்டங்கள் எவை? ( 03 புள்ளிகள் )

v. சட்டத்திற்கான பொருள் விளக்கம் தொடர்பில் நீதிமன்றங்கள் பின்பற்றுகின்ற விதிகள் யாது? ( 03 புள்ளிகள் )

vi. முற்தீர்ப்பு முறையை Precedent பின்பற்றுவதற்கு, நீதிமன்றத்திற்கு அவசியம் தேவைப்பாடாக இருப்பவை எவை? ( 03 புள்ளிகள் )

vii. நியதிச்சட்டம் ( Statuary Law ) என்பதன் கருத்து யாது? ( 03 புள்ளிகள் )

viii. நிருவாச்சட்டத்தை தோற்றுவிப்பதற்கு ஏதுவாக இருந்த காரணிகள் எவை? ( 04 புள்ளிகள் )

2. பின்வருவனவற்றைச் சுருக்கமாக விளக்குக.

i. கையளிக்கப்பட்ட சட்டவாக்கம் (Delicated Legislation) என்பதிலிருந்து புரிந்து கொள்வது யாது? ( 08 புள்ளிகள் )

ii. இச்சட்டவாக்கத்தை அவசியப்படுத்தும் காரணிகள் எவை? ( 08 புள்ளிகள் )

iii. இச்சட்டவாக்கத்தின் மீது பாராளுமன்றம் கொள்ளத்தக்க கட்டுப்பாடுகளை அளவீடு செய்க. ( 09 புள்ளிகள் )

3. பின்வருவனவற்றை தெளிவுபடுத்துக.

i. "இலங்கையின் நீதிமன்ற முறைமைப்படிமுறையில் அமைந்துள்ளது" (Hirarchy System) இக்கூற்று சரியானதா? விளக்குக. ( 12 புள்ளிகள் )

ii. உச்ச நீதிமன்றின் நியாயாதிக்கத்தினை (Jurisdiction of Supreme Court) விளக்குக. ( 13 புள்ளிகள் )

4. பின்வருவனவற்றிற்கு விளக்கம் தருக.

i. பகிரங்க கூட்டுத்தாபனங்கள் ( Public Corporation ) என்பதற்கு விளக்கவுரை செய்து அவற்றை வகைப்படுத்துக. ( 13 புள்ளிகள் )

ii. பகிரங்க கூட்டுத்தாபனத்தின் மீது அமைச்சு பாராளுமன்றம், நீதிமன்றம் இவற்றின் கட்டுப்பாட்டின் தன்மையினை விளக்குக. ( 12 புள்ளிகள் )

## பகுதி II

5. நிருவாகச் செயன்முறையின் தகுதிநிலையை அவதானிப்பதில் நீதிமன்றங்கள் வலுவிகந்த கோட்பாட்டின் (Doctrine of Ultra Virus ) பிரயோகத்திற்கான ஏது நிலைகளையும் த்தன் விளைவுகளையும் பரிசீலனை செய்க.

( 25 புள்ளிகள் )

6. நிருவாக அதிகாரத்தைப் பிரயோகிக்கும் தத்துவம் கொண்டவர்கள் முடிவுகளை எடுப்பதற்கு முன் இயற்கை நீதிக் கோட்பாட்டின் இருபக்கமும் கேள் (Audiultaram Partam) பக்கச் சார்பின்மையான செயற்பாடு (Without Blas), என்பவற்றின் சட்டத் தன்மைகளை தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

( 25 புள்ளிகள் )